# திருவருட்பாவில் வள்ளுவம் - 1

(மு. முத்துஜோதி)

ஒரு மிகப் பெரிய மதில் சுவர்; அதன்மேல் ஏறி மறுபக்கம் என்ன இருக்கிறதென்று யாரும் பார்த்ததில்லை. அதன் உள்ளே வானுயர்ந்த மரங்கள் நிறைந்து இருள் அண்டிய காடு இருப்பதாயும் அக்காட்டினுள் பேய்கள் இருப்பதாயும் செவிவழிச் செய்திகள் பலரையும் அச்சுறுத்தின. இவை எல்லாவற்றையும் மீறி, ஒருமுறை ஒரு மன உறுதி படைத்தவன் மிக முயற்சிசெய்து மதில்மீது ஏறிப் பார்த்தான். மறுபக்கம் பல கனிமரங்களும் வண்ண மலர்களும் நிறைந்து மணப்பதைக் கண்டான். பலாச்சுளைகளும் மாம்பழங்களும் பழுத்து தேன் சொறியக் கண்டான். உடனே உட்பக்கம் குதித்தான்; பழங்களின் இன்பம் கண்டான். ஊரார் யாரும் இதை அறியவில்லை. பலகாலம் கழித்து வேறொருவன் பெருமுயற்சி எடுத்து மதில்மேல் ஏறிப்பார்த்தான். தேன் சொறியும் கனிகளையும் வண்ணமலர்ச் சோலையையும் கண்டான். உள்ளே குதிக்கவில்லை; வெளியே குதித்தான். இவ்வாறு கூவி அழைத்தான்: “உலகோரே! ஓடி வாருங்கள்! பலநூறு பழங்கள் உள்ளே தேன்சொறிய நிற்கின்றன. நீங்களும் என்னோடு சேர்ந்து அனுபவிக்கலாம் வாருங்கள்!” தானும் இன்பம் கண்டு பிறரையும் இன்பம் காண அழைக்கும் இவர்கள்தான் அருளாளர்கள்; அவதாரப் புருஷர்கள்; வருவிக்க உற்றவர்கள். தான் மட்டும் உள்ளே குதித்து இன்பம் அனுபவித்தவர்கள் ஜீவன் முக்தர்கள். ஆனால், அருளாளர்களோ, “யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்று எண்ணி, தான் பெறும் இன்பானுவத்தை உலகத்தாரும் பெற்றுய்ய வேண்டும் எனக்கருதும் பேராளர்கள். ஆண்டவன் அருளாணையால் இவ் உலக மக்களிடையேப் பிறந்து, அகத்தே கருத்து, புறத்தே வெளுத்து இருக்கும் இச் சகத்தோரை திருத்த வந்த ஞான வள்ளல்கள். இந்த வரிசையில் வந்தவர்தான் வடலூர் இராமலிங்க வள்ளலார் ஆவார்கள். அவர் திருவாய் மலர்ந்ததுதான் திருவருட்பா என்னும் தேனமுதம்; எளிய தமிழால் கல்மனங்களை உளியாய் பிளக்க வந்த களியமுதம்.

வள்ளற்பெருமானால் குருநிலைக்கு ஏற்றப்பட்டவர், திருஞான சம்மந்த மூர்த்திகள்; பெருமானார் தோத்திர நூலாகவும் சாத்திர நூலாகவும் கொண்டது திருவாசகமும் திருமந்திரமுமாகும். தம்மை நெறிப்படுத்தும் நூலகக் கொண்டது திருவள்ளுவப் பெருந்தகையின் திருக்குறளாகும். திருக்குறளில் சாகாக்கலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்று வள்ளற்பெருமான் குறிப்பால் உணர்த்தினார்கள். திருக்குறளை நேராகவும் குறிப்பால் கருத்தாகவும் பல இடங்களில் திருவருட்பாவில் குறித்துள்ளார்கள். “ஒழிவியலொடுக்கம்” என்ற நூலுக்கு பாயிரவிருத்தி செய்த வள்ளற்பெருமான், இப்பாயிரத்தில் ஓரிடத்தில்

“..........இக்குறிப்புத் தோன்ற வென்றே திருவள்ளுவ நாயனாரும் ‘ஓர்த்துள்ள முள்ளதுணரின்’ என்றா ரென்று அறிக” என்று நேரிடையாக திருக்குறளை கையாள்கிறார். இதுபோன்று பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. இவைகளினும்

மேலாக, வள்ளற்பெருமானின் வாழ்வியல் கருவான உயிர் இரக்கத்தை கொல்லாமையை வள்ளுவத்தில் அவர் உற்றதை உன்னதமாக உணர்தல் வேண்டும் என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

**அருட்பாவின் அகக்கரு:**

வள்ளற்பெருமானின் வாழ்வியல் கருவே உயிர் இரக்கம்தான். ‘‘இரக்கம் ஒருவில் என்னுயிரும் ஒருவும்; இரக்கமும் என் உயிரும் இரண்டல; ஒன்றதே’’ என்பார் வள்ளலார். வாடியப் பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர் அல்லவா வள்ளலார்? இந்த உயிர் இரக்கம்தான் தன்னை ‘‘ஏறா நிலைமிசைமேல் ஏற்றிவிட்டது’’ என்று தான் பெற்ற சாகாநிலைக்கு காரணம் காட்டுவார் பெருமான்.

வள்ளற்பெருமான் ஆங்கிலேயர்கள் தமிழ்நாட்டை ஆட்சிசெய்தபோது தென்னாற்காடு மாவட்டத்தில் மருதூர் என்னும் ஊரில் 1823ஆம் ஆண்டு பிறந்து 51 ஆண்டுகள் நம் புறக்கண்களுக்குப் புலப்பட வாழ்ந்த பின்பு 1874 ஆம் ஆண்டு தாம் போதித்த முத்தேக சித்தி என்னும் கண்ணுக்கும் புலப்படாது கைகளுக்கும் அகப்படாது எங்கும் நிறைந்த பொருளாய் தன் தேகத்தை மாற்றினார்கள். இது வள்ளலார் பெற்ற புதிய அனுபவநிலை இல்லை. தமிழுலகம் பன்னாள் அறிந்த சித்திநிலை. திருமூலரின் திருமந்திரம் காலம் முதல் நால்வர்கள் வரை நல்லோர் கண்ட நனி நிலை. ‘சாகாக்கலை’ என்று சித்தர்கள் சித்தரித்த இந்த சித்திநிலையை ‘மரணமிலாப் பெருவாழ்வு’ என வள்ளலார் வாய் மொழிந்தார்கள்.

இந்த மகோன்னத மரணமிலாப் பெருவாழ்வை அடைய, சாதிக்க வேண்டியது என்ன? பெரு விரத தபங்களா? அனுட்டாளங்களா? ஆயிரமாயிரம் ஆசார அலங்காரங்களா? இல்லை; இதற்கு ஒரே சாதனம் உயிர் இரக்கம்தான்; கருணைதான்; அதாவது ஜீவகாருண்யம்தான். இது கொல்லாமையில் மிளிருகிறது. பிற உயிர்களைத் தம் உயிர் போல் பாவிப்பது, உதவுவது, அவைகளின் பசித்துன்பம் போக்குவதுக் கூட கொல்லாமை அதாவது கொலைதவிர்த்தல் தானே? ஆகையினால்தான் கொல்லாமை என்கிற விரதத்தை குவலயம் காக்கும் விரதமாக வள்ளற்பெருமான் கொண்டார்கள்.

**‘‘கொல்லா நெறியே குருவருள் நெறியென**

**பல்கால் எனக்குப் பகர்ந்த மெய்ச் சிவமே’’**

என்று திருவருட்பாவில் அகமகிழச் சொல்லுவார்கள்.

‘‘இறைவனை அடையும் நெறி எது?’’ என்ற கேள்விக்கு ‘‘கொல்லா நெறியே’’ என நேராகப் பதில் வருகிறது அல்லவா? இதை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னால் திருக்குறள் வலியுறுத்தியது. கொல்லாமை என்கிற அதிகாரத்தில் பத்துப் பாக்களால் திரும்ப திரும்ப பறைச் சாற்றுகிறார் திருவள்ளுவர்.

வள்ளற்பெருமான் தம் கொள்கைகளை தொகுத்து ‘இது என்மார்க்கம்’ என சுட்டிக்காட்டியது சன்மார்க்கம் எனும் நன்மார்க்கம். மார்க்கம் என்பது வழி அல்லது

ஆறு. இதைத்தான் வள்ளுவர் ‘நல் ஆறு’ என்று குறிப்பார். ‘அந்த நல் ஆறு என்பது யாது? என்றக் கேள்வியை எழுப்பி, அதற்குத்தாமே பதில் சொல்பவராக, ‘நல் ஆறு’ எனப்படுவது யாதெனின், யாதொன்றும் கொல்லாமைச் சூழும் நெறி’’ என்பார். இதைக் கருவாகக் கொண்டுதான் வள்ளலார் கொல்லா நெறியே உண்மை வழி அதாவது சத் மார்க்கம் - சன்மார்க்கம் என உணர்த்தினார்.

**யார் ஞானி?**

கடுந்தவம் புரிந்து ஐம்பொறி அடக்கி, சில முனிவர்கள் பெருவரம் பெற்றார்கள். ஒரு ஆணைப் பெண்ணாக்கவும், ஒரு பெண்ணை ஆணாக்கவும் வல்லபம் கூட பெற்றார்கள். ஆனால் அவர்கள் கொல்லா நெறியை கைக்கொள்ளவில்லை எனில் அவரை ஞானி எனக் கூறாதே என்பார் வள்ளலார்.

இதோ பாடல்:

**“மரு வாணைப் பெண்ணாக்கி ஒருகணத்திற்**

**கண்விழித்து வயங்கும் அப்பெண்**

**உரு வாணை உருவாக்கி இறந்தவரை**

**எழுப்புகின்ற உறுவ னேனும்**

**கருவாணை யுற இரங்காது உயிர் உடம்பைக்**

**கடிந்து உண்ணும் கருத்தனேல் எங்**

**குருவாணை எமது சிவக் கொழுந்தாணை**

**ஞானியெனக் கூறொணாதே’’**

இந்தப் பாடலில் கொல்லா நெறியை வள்ளலார் வலியுறுத்தும் எல்லைத் தெரிகிறது. இந்த தாக்கம் தமிழ்மறையாம் திருக்குறளிலிருந்து வருவதாகும்.

**“நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்**

**கொல்லாமை சூழ்வான் தலை’’**

என்பது வள்ளுவம். நீத்தார் என்போர் துறவோர். துறவோர்களிலேயே தலையானவர் - மேலானவர் - யார் என்றால், கொல்லாமையை சூழ்ந்தவர் - சார்ந்தவர்தான் என்கிறார் வள்ளுவப்பெருந்தகை.

**ஆன்மலாபம்**

நாம் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும் உந்து சக்தி எதுவெனில், அச்செயலின் இறுதியில் நாம் பெறப்போகும் பயன் - லாபம் தான். அந்த வகையில், நம் ஜீவிதத்தின் லாபம் எது? உலகின் சுகப் போகங்களா? ஆழ சிந்திப்பவர்கள் இல்லை

என்றுதான் பதில் சொல்வார்கள். ஏனெனில் இப்பொருட்கள் நிலையற்றவை – மறைந்து போகக் கூடியவை. உலகோரை மயக்கச்செய்யும் சித்து விளையாட்டுகளா? இல்லை, இவை கூட நிலையற்றவைதான். ஒரு வேளை, இறந்து போனவர்களை எழுப்புகிற மிக உயர்ந்த சித்துக் கூட இந்தப் பிறப்பின் உயரிய லாபமாக இருக்குமா? ஒருவாறு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் அவ்வாறு எழுப்பப்பட்ட அந்த மனிதன் கூட மீண்டும் கூற்றுவனால் கொல்லப்பட்டானே? அப்படியெனில், மற்ற உயிர்களுக்கு உயிர்க்கொடுப்பதைக் காட்டிலும் எது உயர்ந்ததாக இருக்க முடியும் என்றால், மற்ற உயிரை எழுப்புகிற தான் உயிரோடு இருப்பதுதான். செத்த உயிரை எழுப்பபுவதைக் காட்டிலும் தான் சாகாமல் இருப்பதே இப்பிறவின் மிகப்பெரிய லாபமாக இருக்க முடியும். பிறவா வரத்தைக்காட்டிலும் இந்த இறவா வரம்தான் வாழ்வின் மிகப்பெரிய லாபமாகக் கருத வேண்டும். இதைத்தான் ஆன்ம லாபமாக வள்ளற்பெருமான் குறிக்கின்றார். இந்த ஆன்மலாபத்தை பெற ஒரு நன்னெறி-கொல்லாமைதான்! இந்த கொல்லா நெறியை பேணுபவர்களுக்கு இறவாமையே ஆன்மலாபமாக சித்திக்கின்றது. இந்த இருபெரும் அருட்பா உண்மைகளும் வள்ளுவத்தில் பூத்த மலர்கள்.

**“கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவார் வாழ்நாள்மேல்**

**செல்லாது உயிருண்ணும் கூற்று”**

என்பது வள்ளுவர் வாக்கு. கொல்லாமை என்பதை விரதமாகக் கொண்டு ஒழுகுவார் - வாழ்வார்கள் வாழ்க்கையின்மேல் - உயிரையும் உடலையும் இருவேறாகக் கூறு போடுகிற கூற்றுவனின் கொடுங்கரம் மேவாது என்கிறது இக்குறள். ஒரு மனிதன் பிறவிப் பெருங்கடலை கடப்பதற்கு ‘இறவாமை’ ஓர் மேலான சாதனம் என்ற கருத்தையும், இந்த இறவாமையை எய்த கொல்லாமையே இறுதிச் சாதனம் என்கிற கருத்தையும் வள்ளற்பெருமான் போன்ற அருளாளருக்கு வழங்கியப்பெருமை திருக்குறளுக்கு உண்டு.

**பசி தவிர்த்தலும் கொலை தவிர்த்தலும்:**

உயிர்களை வருத்தும் துன்பங்களை ஏழு என்று பகுப்பார் வள்ளலார். அவை

1. பசி
2. கொலை
3. தாகம்
4. பிணி
5. இச்சை
6. எளிமை
7. பயம் என்பனவாம்.

இந்த ஏழினுள்ளும், பின் ஐந்தும் முன் இரண்டாகிய பசியிலும் கொலையிலும் அடங்கும். பசித்துன்பமும் கொலைத்துன்பமும் நேர்கிறபோது, மற்ற ஐந்து துன்பங்களும் தொலைந்து போகின்றன. பசி, கொலை இரண்டிலுங்கூட,

பசித்துன்பத்தில் கொலை அடங்கும். எவ்வாறு எனில், ஒரு உயிரின் பசியைப் போக்க உளம் இரங்குவார் - நெகிழ்வார் - அதை உயிர்க்கொலை துன்பத்தினின்றும் காத்தவராகிறார். எனவே, கொலை தவிர்த்தலும் பசி தவிர்த்தலில் அடங்குகின்றது. பசியைப் போக்க முனையும் கருணையாளர்கள் கொலைக்கு அஞ்சுவார்கள் என்று முடிப்பார்.

இனி வள்ளுவம் பேசுகிற பசித் தவிர்தலையும் கொல்லாமையையும் நோக்குவோம்.

அறச்செயல் என்பது எந்த உயிரையும் கொல்லாது இருத்தல்தான் என்று கொல்லாமையை வலியுறுத்தும் பத்துப்பாக்கள் அடங்கிய 'கொல்லாமை' என்னும் அதிகாரம் திருக்குறளில் ஒரு முத்தாரம். மற்ற எல்லா பாடல்களுமே கொல்லாமையைப் பற்றியே பகரும் நிலையில், இரண்டாவது பாடல், பசி தவிர்த்தலைப் பற்றி மட்டுமே பகரந்து நிற்கிறது.

கொல்லாமை அதிகாரத்தின் இரண்டாவது பாடலாக திருக்குறள் காட்டுவது:

**"பகுத்துஉண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்**

**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"**

கிடைத்ததைப் பகிர்ந்து கொடுத்து தானும் உண்டு பலவகை உயிர்களையும் பாதுகாத்தல், அறநூலார்கள் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் மேலானதாகும் என்கிறது இந்த அமுதக் குறள். இதில் சிறப்பு என்னவெனில், இப்பாடலில் 'கொல்லாமை' என்கிற அதிகாரத் தலைப்பிற்கு ஒப்ப, 'கொல்லாமை' என்கிற நேர் வார்த்தையோ அன்றி குறிப்பு வார்த்தையோ இல்லை. பசி தவிர்த்தல் என்ற அதிகாரம் ஒன்றின் கீழ் வரவேண்டியப் பாடல் தவறுதலாக கொல்லாமை அதிகாரத்தில் தொகுக்கப் பட்டுவிட்டதோ என்று ஐயுறும் வண்ணம் பாடலின் அடைவும் கருத்தும் உள்ளன. ஆனால் இந்த அடைவின் ஆழத்தை தமது அருட்பாவில் மிக ஆழமாக அறிவிக்கின்றார் வள்ளலார். பசித்துன்பத்தால் வருந்தும் உயிரின் துன்பங்களை 21 வகையெனப் பட்டியலிடும் வள்ளற்பெருந்தகை கடைசி அவத்தையாக மரணத்தின் முடிவை குறிக்கின்றார். அந்த 21 ஆவது நிலைக்கு முந்திய 20 ஆவது நிலையில் கூட அந்த உயிருக்கு உணவு கிடைக்கும் என்றால், அந்த உயிர் மரணத்தின் வாயிலிருந்து மீண்டு, மீண்டும் உயிர் பெற்று விடும் என்ற அரிய உண்மையை 'ஜீவ காருண்ய ஒழுக்கம்' என்ற நூலில் படிப்பார் கண்கள் கண்ணீர் சொறியும் வண்ணம் விளக்குகின்றார். இதை அமெரிக்க நாட்டில் ஓர்முறை நீதிமன்றத்தின் அனுமதியின் பேரில், ஒரு மரணதண்டனை குற்றவாளியிடம் பட்டினிச் சாவுபோட்டு ஒரு மருத்துவர்குழு ஆராய்ந்தது. அந்த மனிதன் மரணத்தை தழுவுகிற வரையில் அவன் உடல் பெற்ற மாற்றங்களை நுணுக்கமான கருவிகள் மூலம் பதிவு செய்தனர். இதில் மிகப்பெரிய விந்தை எதுவெனில், மரணம் அடையும் வரை அவர்கள் கண்டறிந்ததும் 21 நிலைகள். அதனினும் வியப்பு என்னவெனில், வள்ளற்பெருமான் அருட்பாவில் பட்டியலிட்ட அதே வரிசையில் அந்த மருத்துவ

அறிக்கையின் வரிசைகளும் இருந்ததுதான். இந்த துன்பங்களையும் பசியால் மரணம் நேர்கிற கடைசிக் கணத்தில் கூட உணவு வழங்கி பசித்துன்பம் போக்கப் படுமானால் - அந்த மரணம்-கொலை-தவிர்க்கப் படுமென்று வள்ளலாரின் ஜீவகாருண்ய ஒழுக்கம் இயம்புகின்றது. ஆக பசிதவிர்த்தலும் கொல்லாமையும் ஒன்று என்ற அற்புதமான உண்மையை திருக்குறள் ஈராயிரம் ஆண்டுகட்கு முன் கொல்லாமை அதிகாரத்தில் சொன்னதை, 200 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த வள்ளற்பெருமான் தம் திருஅருட்பாவில் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற உரை நடை நூலில் பாமரரும் படித்து நெஞ்சம் நெகிழும் வண்ணம் திருக்கை சாற்றியுள்ளார்.

வள்ளுவத்தின் தாக்கம், பின் வந்த எல்லா நூல்களிலும் எவ்வாறு பாங்காய் மிளிருகிறதோ, அதே போன்று இராமலிங்க அடிகளாரின் திருவருட்பாவிலும் ஆங்காங்கே ஒளிருகிறது என்பதை உணர்வோமாக.

**வள்ளுவத்தின் வழி நடப்போம்**

**வள்ளலாரின் நெறி பிடிப்போம்!**

- இன்னும் வளரும்.